விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 184 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 06 புதன்கிழமை (21.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### யாழ்.மாவட்டத்தில்
## பாணின் விலை ரூ.10ஆல் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்படுகின்றது என யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் கார்த்திகேசு பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை 15

## தலைவர் பிரபாகரன் எங்கே?
### தகவலறியும் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் கோரிக்கை இராணுவத்தால் நிராகரிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எங்கே என தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் ஒருவரின் கோரிக்கையை இலங்கை இராணுவம் நிராகரித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் படையினரால் சடலமாக மீட்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்குவது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் 02

# தமிழ் மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்



## அவுஸ்திரேலிய பாராளுமன்றில் செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ்

(கான்பெரா)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் செனட்டர் டேவிட் சூபிரிட்ஜ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நான் தமிழ் மக்களிற்கு ஆதரவைத் தெரிவிக்க விரும்புகின்றேன். தமிழ் அகதிகள் பேரவையின் அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்விற்கு என்னை 15

### தண்டப் பணத்தை
## அதிகரிக்க நடவடிக்கை
### போக்குவரத்து அமைச்சு

(கொழும்பு)

நாடளாவியரீதியில்நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கருத்தில் கொண்டு விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக தண்டப்பணத்தை 02

## தடையின்றி நிவாரணம் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசாங்கம் வழங்கும் நிவாரண கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

ஏதாவது பிரதேசங்களில் அதில் குறைபாடுகள் காணப்பட்டால் 15

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பில் யாருக்கும் அநீதி இழைக்கப்படாது
### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டின்போது உள்நாட்டுக் கடனில் எவ்வித குறைப்பும் இருக்காது என்றும் கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் பொருட்டு பண வைப்பீட்டாளர்களுக்கு மற்றும் ஊழியர் சேமலாபம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படாது என்றும் அர 15

### சமூக தொடர்புகள் இல்லாததே
## பல்கலைக்கழக மாணவர்களின் விபரீத முடிவுகளுக்கு காரணம்
### முன்னாள் மனநல வைத்தியர்

(கண்டி)

பல்கலைக்கழக மாணவர்கள் இடையேசமூகத்தொடர்பு மற்றும் சகிப்புத் தன்மை இல்லாததே மாணவர்கள் விபரீத முடிவெடுக்கக் காரணம் என கண்டி தேசியவைத்தியசாலையின் முன்னாள் மனநல வைத்தியர் விக்கிரமசிங்க தெரிவித்துள் 15

## பாராளுமன்ற பாதீட்டு அலுவலக யோசனை
### வாக்கெடுப்பின்றி திருத்தத்துடன் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற பாதீட்டு அலுவலக யோசனை திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றத்தில் இந்த யோசனை விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக பொது 15

## பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை விஸ்தரிக்க
### 168 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை விஸ்தரிப்பதற்கும் பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் 900 மீற்றர் ஓடுபாதையை புனரமைத்து, புதிதாக 300 மீற்றர் ஓடுபாதையை இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக துறை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப் ஒப்பந்தத்தை எதிர்க்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்ற கட்சியின் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான தன்னிச்சையான கொடுக்கல் வாங்கல்களினால் அரசாங்கம் கொண்டு வந்த சகல பிரேரணைகளுக்கும் நிபந்தனையின்றி உடன்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கட்சிக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டது.

அங்கு கருத்து வெளியிட்டுள்ள எம்.பி.க்கள், சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், நாட்டுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கி வெற்றிகரமான அடைவுகளை எட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள ஒப்பந்தம் பாதகமான நிபந்தனைகளுடன் கைச்சாத்திடப்பட்டு அந்த உடன்படிக்கை நாட்டுக்கு முன்வைக்கப்படாததன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழு ஏகமனதாக அதனை எதிர்ப்பதற்கு தீர்மானித்துள்ளது. (ம-7)

# வவுனியாவில் விபத்து இருவர் காயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் கணவன், மனைவி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா நகரில் இருந்து பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள தமது வீடுநோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற கணவன் மனைவியை வேகமாக வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த இருவரும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்தை ஏற்படுத்திய இளைஞர் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளை கைவிட்டு தப்பி ஓடியுள்ளார். எனினும் குறித்த பகுதியில் ஒன்று கூடிய இளைஞர்கள் அந்த நபரை நையப்புடைத்ததுடன், பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை விபத்தை ஏற்படுத்திய நபர் மதுபோதையில் இருந்தாரா என பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விபத்தில் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,286)

## தலைவர்...

என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இறுதி யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் பிரபாகரனின் மரணம் தொடர்பான சர்ச்சைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

குறிப்பாக பிரபாகரனின் மரபணு (DNA) பரிசோதனை, பிரேத பரிசோதனை அறிக்கைகளை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருப்பதாக குற்றஞ்சுமத்தப்படுகிறது.

இதனைக் காரணங்காட்டி பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்கிற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன.

எனினும், அதனை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இவ்வாறான நிலையில், பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் மிதுன்ஜயவர்தன கோரியுள்ளார்.

பிரபாகரனின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, DNA பரிசோதனை அறிக்கை, உயிரிழந்தது பிரபாகரன் என உறுதி செய்வதற்கு யாரிடமிருந்து DNA மாதிரிகள் பெறப்பட்டன? என்பது தொடர்பான தகவல்களை வழங்கக் கோரி இந்த தகவலறியும் விண் ணப்பம் முன்வைக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகத்துக்கு தான் இந்த விண்ணப்பித்தை அனுப்பி வைத்திருந்ததாக ஊடகவியலாளர் மிதுன் கூறுகிறார்.

"தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்தத் தகவல்களை வழங்கினால் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்" என்று குறிப்பிட்டு இலங்கை இராணுவமும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும் ஊடகவியலாளரின் தகவல் கோரிக்கையை நிராகரித்துள்ளது.

இலங்கை தகவலறியும் ஆணைக்குழுவுக்கு இது தொடர்பில் மேன்முறையீடு செய்துள்ளதாகவும் ஊடகவியலாளர் மிதுன் தெரிவித்தார். (ம-7)

## அதிகரிக்க...

அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

வாகனம் செலுத்துவதற்கு முன்னர் சாரதியின் உடல் தகுதி மற்றும் மனநிலை ஆகியவற்றை துல்லியமாக பரிசோதிக்கும் இயந்திரம் வெயங்கொடையிலுள்ள தனியார் பயிலுனர் சாரதி பாடசாலை ஒன்றில் பொருத்தப்பட்டுள்ளது.

அதனை அவதானிப்பதற்காக சென்ற போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, தற்போது நடைபெற்று வரும் பரிசோதனைகள் மட்டுமின்றி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஓட்டுநர்களின் உடல் நலம் மற்றும் மன நிலையை அளவிடும் முறையிலும் அவதானம் செலுத்துவோம் என்றார். (ம-7)


**மணமகன் தேவை**

லண்டனில் வசிக்கும் 26 வயது கெமிக்கல் எஞ்சினியராக பணிபுரியும் பெண்ணுக்கு (ஆயிலியம்) தகுந்த மணமகன் தேவை

074 117 8686
004 478 525 41966

(c-6785)

**VILLAGE HOTEL JAFFNA EXPRESS**

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503

**ST. ANTONY`S COMPUTER**

வட மாகாண முன்னணி கணினி விற்பனையாளர்





சகலவிதமான மடிக்கணினி (Laptop), மேசைக்கணினி (Desktop) எம்மால் மிக விரைவில் திருத்திக் கொடுக்கப்படும். மேலும் தரம் மிக்க கண்காணிப்பு கமரா (CCTV) எம்மால் பூட்டிக் கொடுக்கப்படும்.

(C-6786)

189, K.K.S. Road, Jaffna. 021 222 4865 / 077 063 3408

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16036)

076 733 6047
076 755 8606

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 10 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மட்டும்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(16036)

077 259 0391

200 YEARS OF EXCELLENCE

A MILESTONE TO CHERISH

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**

**Service of Praise & Thanksgiving in commemoration of the Bicentenary of the College**

on

Friday, 23rd June at 4.30 pm

**The Annual Prize Giving**

on

saturday, 24th June 2023 at 9.30 a.m

**&**

**A Cultural Event**

on

Saturday, 24th June 2023 at 5.00 p.m

***Parents, old boys & well-wishers are cordially invited.***

**The Principal,**
**St.John's College, Jaffna.**

(C-6787)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகு விரைவில் புதிய அணியாக ஆட்சியை பொறுப்பேற்போம்

## நாமல் சபதம்

**(கொழும்பு)**

**“அரசியல் ரீதியில் நாங்கள் எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள். வெகுவிரைவில் புதிய அணியாக ஆட்சியைப் பொறுப்பேற்போம். ஆகவே, தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசிடம் வலியுறுத்துகின்றோம்” என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜபக்ஷக்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசியல் இலாபம் அடைவதை ஒரு தரப்பினர் பிரதான அரசியல் கொள்கையாகக் கொண்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். எனினும், அவை எதுவும் நிரூபிக்கப்படவில்லை.



ராஜபக்ஷக்கள் நாட்டை அழித்து ஆட்சிக்கு வரவில்லை. மாறாக நாட்டைப் பாதுகாக்கவே வந்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசு எடுத்த ஒரு சில தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

பொருளாதாரப் பாதிப்பை அரசுக்குள் இருந்தவர்கள் அரசியல் நெருக்கடியாக்கினார்கள். ஜனநாயகப் போராட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதச் செயற்பாட்டை அழிப்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தினோம்.

கடந்த வருடம் அரசியல் ரீதியில் நாங்கள் எடுத்த தீர்மானம் சிறந்தது என்பதை மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

வெகுவிரைவில் புதிய அணியாக ஆட்சியை பொறுப்பேற்போம். ஆகவே, தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசிடம் வலியுறுத்துகின்றோம்” என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# முதியோர்களுக்கான கொடுப்பனவுகள் மூன்று மாதம் வழங்கப்படாமல் உள்ளது

## ஆனால் இராணுவத்தினருக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கான பணம் எங்கிருந்து வருகிறது?

### சபையில் கேள்வி

(கொழும்பு)

இலங்கையில் வயது முதிர்ந்தோருக்கான கொடுப்பனவுகள் மூன்று மாதங்களாக வழங்கப்பட்டாமல் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில்நேற்று கருத்து தெரிவிக்கும்போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலமாக வயது முதிர்ந்தவர்கள் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.



நாட்டு மக்கள் வறுமை கோட்டில் இருக்கும் போது இராணுவத்தினருக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மக்கள் பட்டினியில் உயிரிழக்கின்றனர்.

முதியவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை, மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை.

இந்நிலையில் நான் காலியில் இருந்து வரும் போது நட்சத்திரம் பொறிக்கப்பட்ட ஆடையில் இருந்த இராணுவ வீரர் சொகுசு வாகனத்தில் அணி வகுப்பு போல செல்கின்றார்.

இது யாருடைய பணம் என கேள்வியெழுப்பியுள்ளார். (நி)

# பொதுநலவாய செயலாளர் நாயகத்தை சந்தித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(டில்லி)

பிரித்தானியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாந்தை சந்தித்துள்ளார்.

இதன்போது காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான தனது உத்திகளை பகிர்ந்து கொண்ட ஜனாதிபதி, இந்த முயற்சிகளில் பொதுநலவாய நாடுகளின் ஈடுபாடு குறித்தும் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

பொதுநலவாய அமைப்பினுள் டிஜிற்றல் மயமாக்கல் திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பட்ரிசியா ஸ்கொட்லாந்துடன் கலந்துரையாடியுள்ளார். (நி)

# மயக்க மருந்து செலுத்தியதால் மரணித்த குழந்தை

(கொழும்பு)

பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் மயக்க மருந்து வழங்கப்பட்ட இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பேராதனை சிறுவர்வைத்தியசாலையில் குறித்த குழந்தை அனுமதிக்கப்பட்டது. இதன்போது சத்திர சிகிச்சைக்காக மயக்க மருந்தினை உட்செலுத்த வேண்டும் என வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இதற்கமைய உட்செலுத்தப்பட்ட மயக்க மருந்து காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளது.

இதனை வைத்தியசாலையின் வைத்தியர்கள் உறுதிப்படுத்தியதாக குறித்த குழந்தையின் தந்தை ஊடகமொன்றிற்கு தெரிவித்தார்.

இதேவேளை, முன்னதாக இரண்டு தடவைகள் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு பெண்கள் மயக்கமடைவதற்காக வழங்கப்பட்ட மருந்தினால்உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளை உரிய முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும் என அரச மருந்தாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (நி)

# மூளைக் காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி தற்போது கைவசம் இல்லை

## மருத்துவர்கள் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

மூளைக் காய்ச்சல் அல்லது மூளைக் காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்பூசி தற்போது சுகாதார அமைச்சிடம் இல்லை என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மூளை நோய் பரவும் நாடுகளுக்குச் சென்று படிக்கச் செல்பவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நிறுவனத்தின் தடுப்பூசி மையம் இந்தத் தடுப்பூசியை வழங்குவதாக சங்கத்தின் நிபுணர் மருத்துவர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டார்.

இந்நோய் பரவியுள்ள நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்நாட்டிற்கு வந்தால் அது பெரும் பிரச்சினையை உருவாக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தடுப்பூசியை தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும் சில இடங்களில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து வைப்பதால் சிக்கல்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# கல்வியைக் கைவிட்டவர்களுக்கு இலவச தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட பல காரணங்களால் பாடசாலைக் கல்வியை இடை நடுவில் கைவிட்ட மாணவர்களுக்கு இலவச தொழிற் பயிற்சிகளை வழங்கி தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன பணித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மகரகம பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல்வேறு காரணங்களால் பாடசாலைக் கல்வியை இடை நடுவில் கைவிட்ட சிறுவர்கள் குறித்து முறையான அறிக்கை ஒன்றை தயாரித்து இலவசப் பயிற்சி வகுப்புக்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கல்வியை இடைநடுவில் கைவிட்டுச் சென்றதால் அவர்களின் தனிப்பட்ட திறமைகளை வெளிக்காட்ட முடியாமலும், சமூகத்தில் பிரச்சினைகளை தோற்றுவிக்கவும் அது வழிவகுக்கும்.

இது தொடர்பில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் அறிக்கை பெற வேண்டியது கட்டாயமாகும்.

பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு முறையான தொழிற்பயிற்சி, வழிகாட்டல்கள் மற்றும் இலவச பயிற்சி நெறிகள் ஏற்பாடு செய்வதன் மூலம் அவர்களுக்கு வளமான எதிர்காலத்துக்கு அது வழிவகுக்கும் என்றார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரோ தகுதிச்சுற்று

# கிரீஸை 1-0 என வீழ்த்தியது பிரான்ஸ்



யூரோ கிண்ணத்துக்கான தகுதிச்சுற்று தற்போது நடை பெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பிரான்ஸ்-கிரீஸ் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

ஆட்டம் தொடங்கிய விநாடியில் இருந்து இரு அணி வீரர்களும் எதிரணி வீரர்களை கோல் அடிக்கவிடக் கூடாது என்ற நோக்கத்தில் விளையாட முதல் பாதி நேர ஆட்டத்தில் இரண்டு அணியும் கோல் அடிக்கவில்லை.

2 ஆவது பாதி நேர ஆட்டத்திலும் இரு அணி வீரர்கள் கோல் அடிக்க திணறினர். இறுதியில் 55 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு பெனால்டி வாய்ப்பு. கிடைத்தது. இதை பயன்படுத்தி கிலியான் எம்பாப்வே கோல் அடித்தார். இதனால் பிரான்ஸ் 1-0 என வெற்றி பெற்றது.

கிரீஸ் அணியாலும் ஆட்டம் முடியும்வரை கோல் அடிக்க முடியவில்லை. இதனால் பிரான்ஸ் 1-0 என வெற்றி பெற்றது. (4)

# ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் இலங்கைக்கு இலகு வெற்றி



ஒரு நாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிச் சுற்றுப் போட்டியில் ஐக்கிய அரபு இராச்சிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணி 175 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது.

எனினும் ஐக்கிய அரபு இராச்சிய அணியினால் 39 ஓவர்கள் முடிவில் 180 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் 175 ஓட்டங்களினால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இதன்போது பந்துவீச்சில் வனிது ஹசரங்க 24 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தி, ஒருநாள் போட்டியில் தனது சிறந்த பந்துவீச்சை பதிவு செய்தார்.

இதேவேளை, ஒரு நாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிச் சுற்றுப்போட்டியில் நேற்று இடம்பெற்ற அயர்லாந்து அணிக்கெதிரான மற்றைய போட்டியில் ஓமான் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 281 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ஓமான் அணி 48.1 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை கடந்தது. (4)

# இந்துக்களின் பெரும்சமர்

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து




கொழும்பு மற்றும் யாழ் இந்துக் கல்லூரிகளுக்கு இடையிலான "இந்துக்களின் 12ஆவ்து கிரிக்கெட் பெரும்சமர் 2023 புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்வு" நேற்று முன்தினம் கொழும்பு 08 இல் உள்ள பி.சரவணமுத்து சர்வ தேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக, இத்தொடரின் பிரதான அனுசரணையாளரான ஜனசக்தி குழுமத்தைச் சேர்ந்த திரு. ஷாஃப்டர். கலந்து கொண்டார்.

1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டித் தொடரானது 1982 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் 2009 ஆம் ஆண்டு புத்துயிர் பெற்றது.

அந்த வகையில் கடந்த 11 தடவைகளில் 3 தடவைகள் கொழும்பு இந்துக் கல்லூரியும், ஒரு தடவை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளன.

மீதமுள்ள 7 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2858

தியாசகி




தரணியா




துர்க்கா




மதிவேந்தன்




தனுப்பிரியன்




நித்தியன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்யப்படாத காப்புறுதி நிறுவனங்களால் மோசடிகள் அதிகரிப்பு

## காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே காப்புறுதிக் கொள்கைகளை கொள்வனவு செய்யுமாறு இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத காப்புறுதி நிறுவனங்களினால் மோசடி செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மோசடி நடவடிக்கைகள் 2000 ஆம் ஆண்டின் எண் 43 இன் காப்பீட்டுத் தொழில் ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிகளுக்கு முரணானவை என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் குறித்து info@ircsl.gov.lk எனும் இணையத்தளத்தினூடாக தெரிவிக்குமாறு இலங்கையின் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் காப்பீட்டுக் கொள்கைகள் தொடர்பான சட்டபூர்வ வழிகளைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளதுடன், காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழு பதிவு செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களின் பட்டியலை www.ircsl.gov.lk எனும் இணையத்தளத்தின் மூலம் பார்வையிட்டு செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# நாட்டை மீட்க கட்சிகளின் ஆதரவு அவசியம்

## வஜிர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு மிக முக்கியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"நிலையானதொரு தேசிய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ளார்.

எனவே, பொருளாதார சமரில் வெல்வதற்கு எமக்கு இந்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஆதரவு முக்கியமானதொன்றாகும்." என தெரிவித்தார். (நி)

## சாரதி அனுமதிப்பத்திரம்

# செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க திணைக்களம் முடிவு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க, சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அச்சடிக்கும் அட்டைகள் பற்றாக்குறையால் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், பாதுகாப்பு குறியீடு மற்றும் ஒரு வருட செல்லுபடியாகும் காலத்துடன் வழங்கப்பட்டன.

சாரதி அனுமதிப்பத்திர அட்டைகள் அச்சடிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 800,000 அட்டைகளை இன்னும் அச்சிட வேண்டும். நாளாந்தம் 4,000 அட்டைகள் அச்சிடப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


# கண்ணீர் அஞ்சலி



அமரர்.சாந்தா அபிமன்னசிங்கம்

ஈழத்தின் முதல் தமிழ்ப்பெண் ஜனாதிபதி சட்டத்தரணியும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சட்ட ஆலோசகருமான சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
இல்லப் பிள்ளைகள்,
பணியாளர்கள்.

[6780]


# இராசிபலன்

21.06.2023
ஆனி 06, புதன்கிழமை
திருதியை பிற்பகல் 2.39 மணிவரை
பூசம் பின்னிரவு 1.03 மணிவரை

சுபநேரம் - 4.24-5.54 மணிவரை
இராகுகாலம் - 11.54-1.24 மணிவரை
உலக யோகா தினம்

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்


மேஷம்


சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.


கடகம்


விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்


பிரியமான சிலரின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.


மகரம்


நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


ரிஷபம்


செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், தன்னம்பிக்கை அதிகரிப்பும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.


சிம்மம்


தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவு செய்ய சற்று அலைய நேரிடலாம்.


விருச்சிகம்


சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுபநிகழ்வுகளில் புதிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கும்பம்


குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.


மிதுனம்


வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாடு காரிய வெற்றி தரும்.


கன்னி

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


தனுசு

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், உடல் நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நாள்.


மீனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் ஜூலை 15,16 இல்

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பான தெளிவூட்டல் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

GlocalFair 2023 தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்களிப்போடு சர்வதேச மற்றும் உள்நாட்டு வேலை வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான செயற்றிட்டம் எதிர்வரும் ஜீலை 15,16 ஆம் திகதிகளில் யாழ். முற்ற வெளியில் நடைபெறவுள்ளதென அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.



கடந்த ஆண்டு குறித்த நிகழ்வு காலியில் இடம்பெற்றதுடன் காலியில் உள்ள இளைஞர்.யுவதிகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு வழியமைத்துக் கொடுத்ததோடு தொழிலாளர் மற்றும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினை உள்ளிட்ட தொழிற்றுறையில் ஏற்படக்கூடிய சகல விடயங்கள் தொடர்பாகவும் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

காலியிலிருந்து ஆரம்பித்த இச் செயற்றிட்டத்தின் அனுபவங்களோடு அடுத்த கட்டமாக Glocal Fair 2023 இன் முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்.நகரில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கு சர்வதேச தொழிற் சந்தையை அறிமுகப்படுத்தல், தொழிலாளர் பிரச்சினைகளுக்கான தீர்வு உட்பட கொழும்பை மையமாகக் கொண்டிருக்கும் அனைத்து சேவைகளையும் வடக்கே பிரதான நகரமான யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொடுக்கவும் அக்கால கட்டத்தினுள் முன் வைக்கப்படும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஆர். பாபு (076 6923 970) என்பவருடன் தொடர்பு கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# புத்தக அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப் பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பன்னிரெண்டாவது நிகழ்வு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 23, 24, 25 வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4)

## எல்லை தாண்டிய மீன்பிடி

# இந்திய மீனவர்கள் ஒன்பது பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒன்பது இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

நெடுந்தீவு அருகே நேற்று முன்தினம் இரவு இந்திய மீனவர்களின் படகு இருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த ஒன்பது மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின்ரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை மேலுமொரு படகும் வெறுமையாக கரை ஒதுங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த படகு தொடர்பிலும் கடற்படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-33)



வடமராட்சி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் பொலிகண்டி ஜே/394 கிராம சேவகர் பிரிவிலுள்ள பொருளாதார நிலையில் பின்தங்கிய 120 மாணவர்களுக்கான மாலை நேர கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிகண்டி தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# தரம் பெற்ற அதிபர் சங்க வட மாகாண சம்மேளனக் கூட்டம்



(யாழ்ப்பாணம்)

தரம் பெற்ற அதிபர் சங்க வடக்கு மாகாண சம்மேளனக் கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

வடக்கில் அதிபர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்பட்டதுடன் அதற்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.குறித்த நிகழ்வில் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (4-33)

# பொலிஸின் வீட்டினுள் புகுந்து 12 பவுண் நகை கொள்ளை

## துன்னாலையில் சம்பவம்

(கரணவாய்)

பட்டப்பகல் நேரம் பொலிஸாரின் வீட்டினுள் புகுந்து திருடர்கள் அங்கிருந்த 12 பவுண் தங்க நகைகளை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வல்லியானந்தம், துன்னாலை வடக்கு பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வருவதாகவும் அவரது மனைவி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடமையாற்றி வருவதாகவும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை அவர்கள் இருவரும் கடமைக்கு சென்றதை சாதகமாக பயன்படுத்தி வீட்டில் உள் நுழைந்த திருடர்கள் அங்கு இருந்த ஒன்பது பவுண் தாலிக் கொடி, 3 பவுண் காப்பு உள்ளடங்கலாக 12 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

பணி முடிந்து மாலை வீடு சென்ற போது திருட்டு இடம் பெற்றமை தெரிய வந்தது. இத் திருட்டு சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-60)

# யாழில் மருத்துவர்கள் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் உள்ள மருத்துவர்கள் இருவரின் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம் பெறுவதாகத் தெரிவித்தனர்.

காணி பிணக்கு ஒன்றை வைத்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் (4-33)

# மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த யாழில் நடைபவனி முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சர்வமதக் செயற்குழுவானது மத நல்லிணக்கத்தை உருவாக்கும் வகையில் நடைபவனியொன்றை முன்னெடுத்தது.

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் (SOND) ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் ஆரம்பித்து வைத்தியசாலை முன் வீதியூடாக நடைபவனி நூலகத்தை வந்தடைந்தது.

இதன் போது தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் மோகனதாஸ், அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சு. செந்தூராசா மற்றும் நான்கு மதத்தையும் பிரதி நிதித்துவப்படுத்தி மத குருமார், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-33)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலையாவது நடத்திக் காட்டுங்கள்

## அரசுக்கு சஜித் சவால்

(கொழும்பு)

**துணிவு இருந்தால் மாகாண சபைத் தேர்தலையாவது உடன் நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசுக்குச் சவால் விடுத்தார்.**



நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் எவ்வாறான தொரு ஆணையை வழங்கினாலும் அதனை ஏற்பதற்கு நாம் தயார்.

எனவே, மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர்தல் நடத்தப்பட வேண்டும். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.

ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆகியவற்றில் எதையாவது ஒன்றை விரைவில் நடத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# ஓகஸ்ட் மாதம் முதல் விசேட சுற்றிவளைப்பு

## சாரதிகளுக்கு பொலிஸார் விடுத்துள்ள எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்காக விசேட சுற்றிவளைப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டவுள்ளது. மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட பரீட்சார்த்த திட்டத்தில், போதையில் 'வாகனம் ஓட்டிய 41 பேரை புலனாய்வு அதிகாரிகளால் அடையாள்ம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் 19 பேர் பேருந்து ஓட்டுநர்கள் என்பதும், அதிகரித்து வரும் வீதி விபத்துக்களுக்கு குடிபோதையில் வாகனம் ஓட்டுவதும் முக்கிய காரணமாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மதுபானம் பாவித்தவர்களைக் கண்டறியும் முறைகள் இருந்தாலும், போதைப்பொருள் பாவித்த சாரதிகளைக் கண்டறியும் முறைகள் இல்லாததால், அவ்வாறான சாரதிகளை அடையாளம் காணும் வகையில் பரிசோதனை கருவிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தச் சாதனங்களைப் பயன்படுத்தி மேல் மாகாணத்தில் முன்னோடித் திட்டமாக கடந்த 12ஆம் திகதி முதல் சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (நி)

# நெல் கொள்வனவு ஆரம்பம்

## மஹிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)



விவசாயிகளிடமிருந்து சாதாரண நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

நெல் விவசாயிகளுக்கு நிர்ணய விலை இல்லை என நான் எல்லா இடங்களிலும் கூறுகின்றேன். விவசாயிகளுக்கு அதிக நீதி கிடைக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

அமைச்சரவையிலும் விவாதித்தேன். அதற்காக பல அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்துள்ளேன். இம்முறை நெல்லை கொள்வனவு செய்தது விவசாய அமைச்சோ அல்லது நெல் சந்தைப்படுத்தல் சபையோ அல்ல.

இம்முறை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் நெல்லை அரசு கொள்முதல் செய்து உணவுப் பற்றாக் குறையால் அவதிப்படும் மக்களுக்கு இலவசமாக வழங்கியது.

சீன உரங்களை இலங்கைக்கு கொண்டு வருவது குறித்து முழுமையான அறிக்கையை தயாரித்து வருகிறோம்.

நாங்கள் எதையும் மறைக்கவில்லை. நாங்கள் யாரையும் பாதுகாக்க முயற்சிக்கவில்லை. இது தொடர்பாக பெறப்பட்ட தகவல்களை கோப் குழு மூலம் முன்வைப்போம் என அவர் தெரிவித்தார். (நி)


PEOPLE'S BANK

**தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்**

மக்கள் வுங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.03.2022** வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் **21.07.2023** (வெள்ளிக்கிழமை), **22.07.2023** (சனிக்கிழமை) திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்.கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி; கொடிகாமம்.


நகை மீளெடுப்பதற்கான இறுதித் திகதி :20.07.2023
ஏலவிற்பனை நடைபெறும் இடம் : யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை
திகதி : 21.07.2023(வெள்ளிக்கிழமை)
22.07.2023(சனிக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021-222 2601/ 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(சி-6779)





**மகாதேவ ஸ்ரீ ஆச்சிரமம்**

Regd No:-HA/04/klo2 Of 25/11/1980

T.P :-021 324 3443, 077 459 4283, 077 431 9281

**ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் 33 ஆவது குருபூசை**

**காலம் :- 22.06.2023 வியாழக்கிழமை**
**நேரம் :- காலை 10 மணி**
**இடம் :- ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்**

அங்கத்தவர்கள், சிவனடியார்கள் யாபேரும் பங்குபற்றி குருவருளை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பே சிவம்

**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி,**
**இலங்கை.**

குருநாதன் பணியில்,
**நிர்வாக உறுப்பினர்கள்.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரம் 11 இல் சூரி செவ்
கி.பா: 6
தகைமை/தொழில்:T.O
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13711

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 23
உயரம்: 5' 11"
தகைமை/தொழில்: A/L Male Nurse (pvt)
எதிர்பார்ப்பு: அரச வேலை
தொ.இ: B/13713

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்:5' 4"
தகைமை/தொழில்: O/L வியாபாரம்
(விவாகரத்தானவர்)
எதிர்பார்ப்பு: சாதாரண பெண்
தொ.இ: B/13714

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரேவதி
உயரம்:5' 7"
தகைமை/தொழில்: MBA,BSc உதவி முகாமையாளர்
எதிர்பார்ப்பு: BSc பட்டதாரி
தொ.இ: B/13716

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அனுஷம் 2இல் சூரி. செவ்
கி.பா: 21
உயரம்:170 Cm
தகைமை/தொழில்: NDT Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்/வெளிநாடு
தொ.இ:G/13778

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2 இல் சூரி செவ்
கி.பா: 58 1/2
உயரம்:5'
தகைமை/தொழில்:A/L Beautician
எதிர்பார்ப்பு: படித்த அரச,தனியார் தொழில்/வெளிநாடு
தொ.இ: G/13779

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்:5' 2"
தகைமை/தொழில்: HND Accounts Clark
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ:G/13784

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 33 1/2
உயரம்:158 Cm
தகைமை/தொழில்: MBA
எதிர்பார்ப்பு: Dentel/Lecturer
தொ.இ:G/13795

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேருந்து கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழப்பு

## பாகிஸ்தானில் சோகம்




(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த வாரம் இடம்பெற்ற பேருந்து விபத்தொன்றில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து லாகூரை நோக்கிப் பயணித்த பேருந்தொன்றே இவ்வாறு கல்லார் கஹார் நெடுஞ்சாலையில் வைத்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 25 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரீஸில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற படகு விபத்தில் 298 பாகிஸ்தானியர்கள் உயிரிழந்த சம்பவம் அந்நாட்டு மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளமை அந்நாட்டு மக்கள் மத்தியில் மேலும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# மோடியின் அமெரிக்க பயணம்; பல்வேறு நாடுகள் அவதானம்

(டில்லி)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க பயண நிகழ்வை சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஆய்வு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவுடன் இந்தியா நெருங்கும்போது, ஏனைய நாடுகள் அமெரிக்காவுடன் கொண்டுள்ள உறவில் பாதிப்பு ஏற்படுத்த கூடும் என்பதால் இவ்வாறு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் அழைப்பை ஏற்று பிரதமர் நரேந்திர மோடி குறித்த பயணத்தை முன்னெடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

## ஜம்மு–காஷ்மீர் பகுதியில்

# பேருந்து விபத்திற்குள்ளானதில் 19 பேர் மருத்துவமனையில்


(டில்லி)

ஜம்மு -காஷ்மீர் பகுதியில் பேருந்து விபத்துக்குள்ளாகியதில் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த பேருந்து கால்வாய் ஒன்றில் கவிழ்ந்து வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டைட்டானிக்கை பார்வையிடச் சென்ற நீர்மூழ்கிக் கப்பல் பார்வையாளர்களுடன் மாயம்



அட்லாண்டிக் கடலில் மூழ்கிய டைட்டானிக் சொகுசுக் கப்பலின் சிதைவடைந்த பாகங்களைக் காண, கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணிகளுடன் சென்ற 'ஓஷன்கேட்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் மாயமாகியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதில் பயணித்தவர்களின் விபரங்கள் இதுவரை வெளியாகாமல் உள்ள நிலையில், மாயமான நீர்மூழ்கிக் கப்பலைத் தேடும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி 22,00 பேருடன் பயணித்த டைட்டானிக் கப்பலானது அட்லாண்டிக் கடல் பகுதியில் பனிமலையொன்றில் மோதி விபத்துக்குள் ளானதில் அதில் பயணித்த 1,600 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# இலக்கிய பணிக்காக சல்மான் ருஷ்டிக்கு பரிசு



(பேர்லின்)

பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு ஜேர்மன் நாட்டின் கௌரவம் மிக்க அமைதி பரிசு வழங்கப்படுகிறது.

அவரது இலக்கிய பணிக்காகவும் உயிருக்கு ஆபத்தான நிலையிலும் தொடர்ந்து எழுதி வரும் அவரது உறுதிப்பாடு மற்றும் நேர்மறை அணுகுமுறையை பாராட்டியும் இப்பரிசுக்கு அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார், ஒக்டோபர் 22 ஆம் திகதி, பிராங்பர்ட் நகரில் நடக்கும் விழாவில் அவருக்கு இந்த பரிசு வழங்கப்படுகிறது. 1950 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இப்பரிசு, 25 ஆயிரம் யூரோ பரிசுத்தொகை கொண்டது. (நி)

# பிரேஸிலில் சூறாவளி காரணமாக சுமார் 13 பேர் உயிரிழப்பு



(பிரேசில்யா)

பிரேஸிலில் சூறாவளி காரணமாக சுமார் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரியோ கிராண்ட்டே டோ சுல் மாநிலத்தில் கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக பல் நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இச்சூறாவளியினால் உயிரிழந்த 13 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அம்மாநிலத்தின் சிவில் பாதுகாப்பு முகவரகம் தெரிவித்துள்ளது. 4 மாத குழந்தையொன்றும் உயிரிழந்துள்ளது.

சுமார் 5,000 பேரின் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் 84,000 பேருக்கு மின்விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# 'ரோ'வின் தலைவராக ரவிசின்ஹா நியமனம்



(டில்லி)

இந்தியாவின் உளவு அமைப்பான ரோவின் அடுத்த தலைவராக சத்தீஸ்கர் ஐபிஎஸ் அதிகாரி ரவிசின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

ரோவின் தற்போதைய தலைவராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி சமந்த் குமார் கோயல் பதவி வகிக்கிறார். அவரது பதவிக் காலம் வரும் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் ரோவின் அடுத்த தலைவராக சத்தீஸ்கர் ஐபிஎஸ் அதிகாரியான ரவி சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# 16 நாய் இனங்களை வளர்க்க தடை விதித்தது எகிப்து அரசு

(எகிப்து)

டாபர்மேன், ஜேர்மன் ஷெப் பர்டு, ராட்வெய்லர் போன்ற நாய்களை வளர்க்க எகிப்து அரசு தடை விதித்துள்ளது.

நாய் வளர்ப்பவர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமையே இதற்கு காரணமாக கருதப்படுகின்றது .

அந்நாட்டில் கடந்த மாதம், அண்டை வீட்டுக்காரருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர், அவர்கள் வளர்த்த ராட்வெய்லர் கடித்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார்.

இச்சம்பவம் எகிப்து நாட்டு மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதை அடுத்து ஆபத்தானதாகக் கருதப்பட்ட 16 நாய் இனங்களை வளர்க்க எகிப்து அரசு தடை விதித்துள்ளது.

அவற்றை ஒரு மாதத்திற்குள் கால்நடை துறையிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. குழந்தையைப் போல் வளர்த்த நாயை பிரிய மனமில்லாமல் வருத்தத்தில் உள்ள நாய் உரிமையாளர்கள், சட்டத்தில் சீர்திருத்தங்களை கொண்டு வருமாறு அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம் செய்வோம்! உடல்நலம் காப்போம்! உயிர்நலம் வளர்ப்போம்!



கலாநிதி. பாலசுப்பிரமணியம் சுதாகரன்

இன்று இந்த உலகம் முழுவதும் யோகாசனம் ஒரு நல் வாழ்வுப் பயிற்சி மற்றும் வாழ்க்கை முறையாகப் பார்க்கப்படுகின்றது. உடல் நலம் பேண ஒரு சிறந்த மற்றும் முறைப்படுத்தப்பட்ட அமைப்பினை வழங்குகின்றது. யோகா என்ற சொல்லிற்கு பல பொருள்கள் வழங்கப்பட்டாலும் மேம்படுத்தல் எனும்பொருள் சற்று பொருத்தமாக இருப்பதனை நாம் உற்று நோக்க முடியும். யோகா என்பது வெறும் உடற்பயிற்சி மட்டு மல்ல அது ஒரு முழுமையான வாழ்க்கை முறைப் பயிற்சி என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். யோகா வாழ்க்கை முறை நமது உடல், மனம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழி செய்கின்றது.

யோகாசனம் என்பது யோக வாழ்க்கை முறையில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு உடல் தோரணைகளைக் குறிக்கும். நோயற்ற வாழ்விற்கும் உடல் பலத்திற்கும் ஆரோக்கியம் மிகுந்த நீண்ட ஆயுளுக்கும் யோகாசனம் வழிவகை செய்கின்றது. எனவே தான் யோகா நாம் அன்றாடம் செய்ய வேண்டிய பயிற்சியாகும்.

தற்காலத்தில் உடல் நலத்தை பேணுவதில் அக்கறையோடு இயற்கையுடன் இணைந்து வாழ்வு வாழ்வதில் ஈடுபாடு உடையவர்களாக மனிதர்கள் மாறிக் கொண்டிருக்கும் போக்கினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்கு பிரதான காரணம் உடல் நலம் பேணுவதில் ஏற்பட்டுள்ள விழிப் புணர்வே ஆகும். உடலியக்கம் சீராக இடம்பெற்றால் மாத்திரமே மனிதர்களால் மகிழ்ச்சியாக வாழ முடியும். அத்துடன் இளமைக் காலத்தில் கடினமாக ஓடி உழைத்து முறையற்ற உணவுப் பழக்க வழக்கங்களை பேணிவிட்டு முதுமையில் அவதிப்படுவதனை விட சிறு வயது முதல் உடல் ஆரோக்கியத்தினை பேணி நலம் பெற்று வாழ்தல் நன்று.

இன்றைய நவீன உலகில் அனைத்துப் பொருட்களும் வீடு தேடிவரும் காலம் என்பது உண்மை. நாம் நினைத்தால் எந்தப் பொருளையும் விலைக்கு வாங்க முடியும். அதற்கு பணம் மட்டும் தேவை. ஆனால் வாங்க முடியாத பொருள் உண்டென்றால் அது ஆரோக்கியம் மட்டும் தான். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழி. முன்னையகாலத்தில் இருவர் சந்திக்கும் போது குடும்ப சுகநலம், விவசாயம், இயற்கை நிகழ்வுகள் என இவற்றைப் பற்றியே பேசினார்கள். ஆனால் இன்று நிலைமை மாறி நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ரோல் என்று தான் பேசுகிறார்கள். மொத்தத்தில் பல மனிதர்கள் நடமாடும் வியாதிக் கூடங்களாக மாறிவிட்டார்கள். இதயம் நிறைய பயம், சட்டைப்பை நிறைய மாத்திரைகள், உடல் உறுப்புகளில் குறைபாடு, பலவீனம் போன்ற பல நோய்களிலிருந்து எம்மை பாதுகாப்பது பெரும் சவாலாக உள்ளது. ஒரு காலத்தில் நாமெல்லாம் ஒவ்வொரு உணவையும் சாப்பிடும் போது அதன் சுவையறிந்து சாப்பிட்டோம். ஆனால் இன்று சுவைபார்த்து சாப்பிட்டகாலம் போய் "சுகர்" பார்த்து சாப்பிடும் காலமாக மாறிவிட்டது. உணவே மருந்து என்ற நிலைமாறி மருந்தே உணவு என்றாகிவிட்டதாக சந்தேகப்பட வேண்டியுள்ளது.



சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

யோகா என்பது உடலையும் மனதையும் புத்துணர்ச்சியுடனும் இளமையாகவும் வைத்திருக்க உதவுகின்றது. யோகா எனும் பயிற்சி அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக உள்ளது. உலகம் முழுவதும் உள்ள பெரும்பாலானோர் இன்று யோகா செய்வதனை வழக்கமாக்கிக் கொண்டு வருகின்றனர்.

யோகா செய்வதனால் எண்ணிலடங்கா நன்மைகள் உண்டாகின்றன. 5000 ஆண்டுகள்பழைமையான இக்கலையை நம் முன்னோர்கள் பயிற்சி செய்து பல அற்புத பலன்களை பெற்றுள்ளனர். யோகா என்பது ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்த கோட்பாடு அல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும். யோகா உடற்பயிற்சி, மனப் பயிற்சி, சுவாசப்பயிற்சி போன்ற பயிற்சிகளை உள்ளடக்கியது.

முறையாக யோகா செய்வதனால் உடல் ,உளநலத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். உடலின் பலவீனமான பகுதிகளை வலுவடையச் செய்வதில் யோகா பெரும் பங்காற்றுகின்றது. உடல் எடையை சீராக வைத்துக் கொள்ள உதவுகின்றது. மரணத்தை தள்ளிப் போட வாய்ப்பளிக்கின்றது. நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் என்பவற்றை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வழிவகை செய்கின்றது. இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்பை கரைக்க உதவுகின்றது.

மன அழுத்தத்தை கட்டுப்படுத்துகின்றது. மேலும் தன்னம்பிக்கை, சுய கட்டுப்பாடு, மன ஒருமைப்பாடு போன்ற உயர்ந்த பண்புகளை வளர்க்க உதவுகின்றது. மாணவர்களின் கற்கும் திறனை மேம்படுத்துகின்றது. தேவையற்ற உள நெருக்கீடுகள், மன இறுக்கம், அபரிவித உணர்வுகள், பயம் போன்றவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வழிவகை செய்கின்றது. உடலில் இசைவு இணக்கம் ஆகியவற்றினை அதிகரிக்கின்றது. தசைகளின் நலத்தையும் வலிமையையும் பாதுகாக்கின்றது. சுவாசத்தை சீராக்கி உடலுக்குத் தேவையான ஆற்றலை தருகின்றது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது.

நாம் அன்றாடம் யோகா செய்ய வேண்டுமெனில் உணவில் கட்டுப்பாடு அவசியமாகும் மது, புகையிலை, சிகரெட், இனிப்பு, எண்ணெய் பதார்த்தங்கள், விரைவு உணவுகள் போன்றவற்றை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். உணவு உண்டபின் ஆசனங்கள் செய்யக்கூடாது. யோகாசனம் செய்வுதற்கு ஏற்ற நேரம் அதிகாலை வேளையாகும். ஆகக் குறைந்தது அரை மணிநேரமாவது தினமும் யோகாசனப் பயிற்சியில் ஈடுபடுவோமாக இருந்தால் அந்த நாள் முழுவதும் உற்சாக முள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமையும்.

ஒவ்வோர் ஆண்டுக்கும் ஆனி மாதம் 21ஆம் நாள் அகில உலக யோகா தினமாக நாம் கொண்டாடுகின்றோம். அந்த வக்யில் இன்றைய தினம் சர்வதேச யோகா தினமாக பல்வேறு நாடுகளிலும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் யோகாவினை நாமும் தினசரி வாழ்வில் பயிற்சி செய்து நலமும் உயர்வும் ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும் பெறுவோமாக!!!

# கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

## ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

உள்நாட்டு கடனை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பாக நாட்டில் பல்வேறு தரப்பினர் தவறான தகவல்களை பரப்பி வருகின்ற போதிலும் அது குறித்து அரசாங்கம் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால், நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் அரசாங்கம் எப்போதும் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாராளுமன்றத்தில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தார்.

நம் நாட்டின் வங்கிக் கட்டமைப்பு, நிதிக்கட்டமைப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தாத மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்க அவசியமான மறுசீரமைப்பிற்கு உகந்த தீர்வுகளை அனைவரும் தேடுகின்றனர்.

இது தொடர்பாக, நாடு முழுவதும் பல்வேறு தகவல்கள் மற்றும் அறிவிப்புகள் வெளியாகி வருகின்றன.

இது குறித்து அரசாங்கம் இறுதித் தீர்மானம் எடுத்தவுடன், பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கத் தயாராக உள்ளது.

இது மிகவும் உணர்வுபூர்வமானதொரு விடயமாகும். இது சந்தை நிலைமையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, இந்த மறுசீரமைப்பு தொடர்பாக சந்தேகங்களை எழுப்பும் அறிக்கைகளை வெளியிடாமல் இருந்தால் தான், நமது நிதிச் சந்தையின் ஸ்திரத்தன்மையை நாம் தொடர்ந்து பராமரிக்க முடியும்.

ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் பின்னர் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சிறந்த புரிதல் ஏற்படும்.

எதிர்மறை 7.8 ஆக இருந்த பொருளாதார வளர்ச்சி விகிதம் இந்த ஆண்டின் இறுதியில் எதிர்மறை 3 ஆக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

ஆனால், அரசாங்கம் முன்னெடுத்து வரும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் அதனை விடவும் சிறப்பான முன்னேற்றத்தை அடைய முடியும் என்ற பெரும் நம்பிக்கை உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 700 |
| தக்காளி | 250 | 300 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 200 | 250 |
| கோவா | 280 | 250 | 300 | 300 |
| கரட் | 360 | 400 | 380 | 450 |
| பூசணி | 100 | 100 | 100 | 120 |
| புடோல் | 130 | 140 | 180 | 300 |
| வாழைக்காய் | 100 | 160 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 380 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 250 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 130 | 180 | 180 | 300 |
| பயற்றங்காய் | 500 | 400 | 250 | 350 |
| லீக்ஸ் | 280 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 420 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 380 | 380 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 700 | 800 | 700 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 60 | 70 | 40 | 60 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 600 | 800 |
| முள்ளங்கி | 130 | 140 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 50 | 60 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 160 | 200 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பல்வகை மற்றும் காலநிலை நெருக்கடிக்கு வேளாண் உணவு தொகுதியினூடான தீர்வு



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம் இனிய உறவுகளே!**

வேளாண் உணவு (Agri food) என்பது எமது வாழ்வியலில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் காரணி மட்டுமல்ல இன்னும் எமக்கு தேவையான அனைத்தையும் அள்ளித் தரும் அட்சய பாத்திரம் எனலாம். வேளாண் உணவின்றி எமது வாழ்க்கைக்கு தீனியாக வரும் சமனான ஊட்டச்சத்தான உணவினைப் பெற முடியாது. இதனை உயிர்ப்பல்வகைமை இழப்பிற்கும் (Biodiversity loss) காலநிலை மாற்றத்தினாலான நெருக்கடிக்கான தீர்வாக முன்வைக்கப்படுகின்றது.

அதில் உண்மையும் இல்லாமலில்லை. நாம் வாழும் வாழ்க்கை அவ்வப்போது பல நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டாலும் அவற்றையும் தாண்டி நாம் முன்னோக்கி நகர்ந்து செல்லும் செயலணிக்குள் உள்ளீர்க்கப்பட்டிருக்கின்றோம்.

இவற்றில் பல எம்மையறியாமல் நிகழ்பவையாயினும் அவற்றின் விளைவுகளை நாம் அனுபவ ரீதியாக உணர முடியும். பசி,பஞ்சம்,பட்டினி என தவிக்கின்ற பல இலட்சம் மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு எமக்கெல்லாம் ஆனது. இதனை நாம் எமது பிர்தேசத்தில் எவ்வாறு முன்னெடுக்கின்றோம் என்பதனைப் பொறுத்து எமது மக்களை இவ்வாறான உணவுப் பஞ்சம் என்னும் பேரிடரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். மக்களுக்கான உணவினை மக்களால் உருவாக்கும் நிலையையே இங்கு முத்தாய்ப்பாக குறிப்பிட்டிருக்கின்றேன். இது முழுக்க முழுக்க முயற்சியின் செயற்பாடாகும். அனைவரும் ஒன்றிணைந்தால் அனைவருக்குமான சமனான ஊட்டச்சத்தான உணவினை பெற்றுக் கொள்ள முடியும்.

இதில் மூன்று விடயங்களைப் பற்றி விரிவாக விளக்கமுற்பட்டிருக்கும் இக்கட்டுரை இறுதியில் உயிர்ப்பல்வகை மற்றும் காலநிலை மாற்ற நெருக்கடிகளுக்கு தீர்வினை பரிந்துரைக்கும் எல்லை வரை நீண்டு செல்கின்றது. தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினையே அழித்திடுவோம் என இற்றைக்கு பல்லாண்டுகளுக்கு முன் நமது தமிழ்க்கவி பாரதி அறைகூவியதை இன்னமும் எமது மனது மீட்டிப்பார்ப்பதுடன் அதனை செயற்பட முனைவதனையும் காணலாம். செயல் தானே இறுதிவடிவம். அதுதவறி பேச்சிலே பல விடயங்கள் தங்கி நின்று விடுகின்றன.

அவற்றை செய்து பார்த்தல் மிகவும் அவசியம். உலக மக்களை நோக்கி ஜி-20 என்னும் உலகளாவிய கட்டமைப்பில் விவசாய அமைச்சர்கள் பலர் கலந்துரையாடி வேளாண் உணவுத் தொகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்க முடிவெடுத்திருக்கின்றார்கள். இதுவொன்றும் புதுமையானதல்ல என்பதனை எமது மக்களின் வாழ்வியலுக்கூடாக கவனிக்க முடிந்தாலும் காலநிலை சடுதியாக மாற்றமடைவதும் இன்னும் கூறப்போனால் ஜூன் மாதத்தில் எமது பிரதேசத்தில் அங்கும் இங்குமாக தற்சமயம் பெய்யும் மழைவீழ்ச்சியும் மாற்றத்தை உணரத் தலைப்பட்டிருக்கின்றது எனலாம்.

இம்மாதம் நடைபெற்ற ஜி-20 கூட்டத்தொடரின் வேளாண் அமைச்சர்கள் ஒன்றிணைந்து வேளாண் உணவுத் தொகுதிகளின் முக்கியத்துவத்தை விளக்கினாலும் அதனைத் தொடர்ந்தும் திட்ட வடிவத்தினுள்ளேயே வைத்திருக்க வேண்டியிருக்கின்றது. இதற்காக எம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வது போல உலகளாவிய ரீதியில் உலக அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து வேண்டிய வேளாண் உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கியூ டொங்யூ எடுத்துரைத்திருக்கின்றார். இதனை எமது நாட்டிலும் ஆக்கபூர்வமான முறையில் நடைமுறைப்படுத்த பேண்தகு வேளாண் இலகுகளின் தன்மையினை மீண்டும் ஒரு முறை மீட்டிப் பார்ப்பது அவசியமாகின்றது. வருடங்கள் சில கழிந்தும் இத்திட்ட நடைமுறையினூடாக சீர்செய்தல் உணவுப் பஞ்சத்தினை முழுமையாகத் தவிர்க்க முற்படுகின்ற அணுகுமுறையாகும். பொதுநல சிந்தனையும் நோக்கமும் இவ்வாறான உணவுற்பத்தி செயன்முறையில் தொடர்ந்து அனைவரையும் ஈடுபடுத்திக் கொள்ள உந்துதலாக இருக்கின்றது. இதன் மூலம் எமது பிரதேசத்து உணவுத் தட்டுப்பாட்டினை நாமே உற்பத்தி செய்து ஓரளவிற்கு தீர்க்கக் கூடியதாகும்.

முன்னேற்றங்களை நாம் அவதானிக்க முடிந்தாலும் நாம் தற்போது உணரத்தலைப்படும் பாரியளவிலான உயிர்ப்பல்வகையின் தொய்வு மற்றும் இழப்பினால் , உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை சீர்குலைக்கும் நடைமுறையுடன் பஞ்சம் பட்டினியின் ஆதிக்கம், இயற்கையழிவுகளின் தவிர்ப்பு மற்றும் காலநிலை மாற்றத்தினை சீர்செய்வதற்கான செயன்முறைகளும் தொடர்ந்தும் இவ்வாறான அவல நிலைக்குள் எம்மை சுருக்கிக் கொண்டுள்ளன. இதனை ஒரு எச்சரிக்கை மணியாக பல்வேறு வழிகளில் நாம் ஆராய்ந்து செயலாற்ற வைத்திருக்கின்றது. திட்டமிடல்கள் அனைத்தும் தரமானதாக தீட்டப்பட்டாலும் அதனை நடைமுறைப்படுத்தும் கைங்கரியங்களையும் ஒழுங்கு முறைப்படி செய்து எமது உணவு மற்றும் ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

2020 ஆம் ஆண்டு புள்ளி விபரத்தின் படி உலகளாவிய ரீதியில் 3.1 மில்லியன் மக்கள் தோகாரோக்கியமான உணவினை பெற முடியாதிருந்திருக்கின்றது. 2021 இல் 828 மில்லியன் மக்கள் உணவின்மையை நேரடியாக சந்திக்க முனைகின்றது. மேலும் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் இன்னும் முக்கியத்துவப் படுத்திய விடயங்களாக பாரம் பரிய உயிர்பல்வகைமையின் தேவையை வேளாண் உணவு தொகுதியினுள் உள்ளீர்த்து காலநிலை மாற்றம், சூழல் தன்மைகளுக்கு ஏற்ப பீடைகளின் பெருக்கம், தாவர நோய்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பனவற்றை தவிர்க்கவும் அவற்றினை முகாமைப்படுத்தவும் முடியும்.

தேகாரோக்கியமான தொகுதிகள் நல்ல குடிநீர் கிடைக்கவும் காலநிலையை மாற்றியமைத்து இயற்கை பேரிடர்களிலிருந்து காப்பாற்றும் கட்டமைப்புக்களை நிறுவிடவும் முடியும். குறிப்பாக உயிர்ப்பல் வகைமையை நாம் இழப்பதற்கான காரணிகளாக எமது தவறானதும் தேவையற்றதுமான விவசாய நடவடிக்கைகளாகும். இதிலிருந்து வேளாண் உணவு தொகுதிகளை உருவாக்கி உயிர்ப் பல்வகையினதும் காலநிலை இழப்பினதும் தாக்கத்தை சீர் செய்ய முடியும்.


இதனை மேலும் விரிவாக்கினால் திருந்திய வேளாண் செய்கைகளை ஊக்குவிப்பதனூடாக வேளாண் சார் வணிகத்தையும் எமது பொக்கிஷங்களான சூழல் தொகுதிகளையும் பாதுகாப்பதுடன் மண்ணினது தரம் மற்றும் உற்பத்திப் பொருட்களின் தேவையைக் குறைத்து எமது விவசாயத் தொகுதிகளை அனைத்து இடர்களுக்கும் தாக்குப் பிடிக்கக் கூடியவாறு ஆக்குதலாகும். இதன் மூலம் இயற்கை பேரிடர்களை நாம் இணைந்து எதிர்கொள்ள முடியும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பல்வகை என்பனவற்றுக்கிடையிலான தொடர்பினை அண்மையில் அவதானித்த குண்மிங் - மொன்றியல் உலகளாவிய உயிர்பல்வகை நிலைச்சட்டம் (Kunming-Montreal Global Biodiversity Framework) பெற்றுக் கொடுக்கும். இதன் மூலம் ஆறுதலான மற்றும் இயற்கையை அனுசரித்த செய்கைமுறைகளைக் கடைப்பிடிக்கலாம். 2030 ஆம் ஆண்டு எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட பேண்தகு வேளாண் செய்கைமுறைகளாக இனங்காணப்பட்ட 23 எல்லைகளில் அரைவாசியினை வேளாண் உணவுத் தொகுதிகளை பரந்து பட்டு விருத்தி செய்வதன் மூலம் சீர்செய்ய முடியும்.

இதன் மூலம் நிறைவான உணவு உற்பத்தியையும் தேகாரோக்கியமான உணவு உண்ணுதலையும் சாத்தியமானதாக்கலாம். எமது பிரதேசத்திற்கான அதிமுக்கிய வளங்களான பயிரினங்களை உற்பத்தி செய்து வழங்கலாம். உலகளாவிய ரீதியில் பொருளாதார வீழ்ச்சியினை தடுத்தல்,காலநிலை மாற்றத்தை சமாளித்தல், அதிகரித்த மழைவீழ்ச்சி, சூறாவளி, வெள்ள அனர்த்தம், மற்றும் வரட்சி நிலைமைகளை சமாளிக்கவும் இவற்றுடன் உணவுற்பத்தி, மற்றும் எரிபொருள் பிரச்சினைகள் மற்றும் உணவுற்பத்தியினை பெருக்கிக் கொள்ளவும் முடியும். வேளாண் செய்கையில் உருவாகும் பச்சை வீட்டு வாயுக்களை குறைப்பதற்கும் பயிர்ச்செய்கையை அதிகரிப்பதற்கும் இவ்வாறான திட்டங்கள் உதவி செய்யும்.

பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான நிறையுணவை எம்மூர் தானியங்கள் மற்றும் நெல்லினங்களை பயிரிடுவதன் மூலமும் இயற்கையுடன் ஒன்றிணைந்த வேளாண் செய்கையை பெருக்கிட முடியும். எம்முடைய வளத்தை முழுமையாக பயன்படுத்த முடியாமல் எதனையும் நாம் சாதித்திட முடியாது. அனைவரும் ஒன்றிணைந்து எம்மவர் விவசாயத்தை காப்பாற்றிடுவோம். எமக்கான உணவை நாமே உற்பத்தி செய்து அதனை அனைத்து மக்களுக்கும் கிடைக்க செய்வதோடு பஞ்சம் பட்டினியினால் எந்த உயிரும் அவதிப்பட்டுக் கொள்ளக் கூடாது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதம் இன்று

(கொழும்பு)

உத்தேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு மீதான விவாதம். இன்று இடம்பெறவுள்ளதுடன். ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான விவாதம் நாளை இடம்பெறவுள்ளது.

நேற்று ஆரம்பமான பாராளுமன்ற கூட்டத்தொடர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (நி)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

ஜூன் மாதத்தின் முதல் 18 நாட்களில் மட்டும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, ஜூன் மாதத்தில் இதுவரையான காலப் பகுதியில் 52,663 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் விவசாயிகளுக்கே பாதிப்பு

### சஜித் பிரேமதாஸ சாடல்



(கொழும்பு)

நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் தீர்மானிக்காத காரணத்தினால், விவசாயிகள் கடுமையான நஷ்டத்திற்கு முகங்கொடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளுக்கு இன்னமும் சாதாரண விலையில் உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

ஒரு கிலோ நெல்லின் விலை 80 ரூபாய்க்கும் 90 ரூபாய்க்கும் தான் வாங்கப்படுகிறது.

அரிசி கிலோ ஒன்று 200 ரூபாய்க்கும் 220 ரூபாய்க்கும் விற்பனை செய்யபடுகிறது. அப்படியானால் இதில் அதிக இலாபத்தை யார் சம்பாதிப்பது?

இவ்வாறான செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு, அரசாங்கம் ஏன் நெல்லுக்கான நிர்ணய விலையை தீர்மானிக்கக் கூடாது? ஜனாதிபதி கடந்த காலங்க ளில் விவசாயிகளைச் சந்தித்து, 120 ரூபாய்க்கு நெல் கொள்வனவு செய்யப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

மேலும், நெல்லுக்கான நிர்ணய விலையாக 100 ரூபாவை ஆக்கியதாகவும் 100 ரூபாவை பின்னர் 120 ரூபாவாக மாற்றியதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால்கூறப்படுகிறது. ஆனால், இது நடைமுறைக்கு வந்துள்ளதா என கேட்க விரும்புகிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## இணைய வழி கடவுச்சீட்டு முறைமையில் 3,265 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள்

(கொழும்பு)

நாட்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இணைய வழி கடவுச்சீட்டு முறைமையின் கீழ் இதுவரை 3 ஆயிரத்து 265 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேரடியாக கடவுச்சீட்டை பெற செல்பவர்களிடம் இருந்து சட்ட விரோதமாக பணத்தை பெறும் சம்பவங்கள் அண்மைக் காலத்தில் பதிவாகியிருந்தது.

அதனை தவிர்ப்பதற்காகவும் பொதுமக்களுக்கான சேவையை இலகுபடுத்தவும் இணைய வழியில் விண்ணப்பம் கோரல் திட்டம் கடந்த வாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த முறைமையின் ஊடாக கடவுச்சீட்டுக்களை விண்ணப்பதாரர்கள் தங்களது வீடுகளுக்கே பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை, ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் முறைப்பாடு அளிக்க அல்லது கணினி தொடர்பான தகவல்களைப் பெற, 1962 என்ற அவசர இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளலாம் என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 51 பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் உப அலுவலகங்கள் இணையவழியில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்த நபர்களின் கைரேகைகளை ஏற்றுக்கொள்ளும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி)

## புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்த வாரம் நியமனம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவின் சேவைக் காலம் எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்த வாரம் நியமிக்கப்படுவார் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன மார்ச் 26 அன்று ஓய்வு பெறவிருந்த நிலையில் அவருக்கு மேலும் மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான தேஷபந்து தென்னகோன், நில்ந்த ஜயவர்தன, லலித் பத்தி நாயக்க, பிரியந்த வீரசூரிய மற்றும் அஜித் ரோஹன ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ள நிலையில் நியமனம் குறித்து உரிய தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. (நி)

## ஆனி மாத இராசி பலன்கள் 16.06.2023-16.07.2023

### தனுசு

**எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டிருக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநாதன் குரு உங்கள் இராசியைப் பார்க்கிறார். சகாய ஸ்தானத்தில் சனி பகவான் உலா வருகிறார். எனவே மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் திருப்தி தரும். குரு பார்வையால் குடும்பத்தில் இதுவரை நடைபெறாதிருந்த காரியம் ஒவ்வொன்றாக நடைபெறத் தொடங்கும். உத்தியோகத்தில் உயர்மட்ட அதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு ஆச்சரியப்படுவதோடு, அதற்கேற்ற விதத்தில் கூடுதல் பொறுப்புகளையும் கொடுக்கலாம்.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன், அங்குள்ள சூரியனோடு சேர்ந்து "புத ஆதித்ய யோக"த்தை உருவாக்குகிறார். எனவே நல்ல நிகழ்ச்சிகள் பலவும் இல்லத்தில் நடைபெறும். குறிப்பாக கல்யாணம், காதுகுத்து, மணிவிழா, முத்துவிழா, பவளவிழா போன்ற விழாக்கள் தாமதமின்றி நடைபெற வழிபிறக்கும். புதன் தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்குவதால் அரசு வழி ஆதரவோடு புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர் உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். குரு பகவான் பார்வை செவ்வாய் மீது பதிந்து "குரு மங்கல யோகம்" உருவாகின்றது. இக்காலத்தில் முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். தொழிலில் இருந்த ஏற்ற இறக்க நிலை மாறும். வாடகைக் கட்டடத்தில் நடை பெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக" த்தை உருவாக்குகிறார். இதன் விளைவாகப் பெண்களால் பெருமைசேரும். வெளிநாட்டில் பணிபுரிய முயற்சித்தவர்களுக்கு அழைப்பு வரலாம். குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது பதிவதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் தொழில் சம்பந்தமாக எடுத்த புது முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காமல் போகலாம். உறவினர் வழியில் மன ஸ்தாபங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். உங்கள் இராசிக்கு 7, 10 இற்கு அதிபதியான புதன் 8 இல் வரும்பொழுது, வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் கிடைத்து வருமானம் வரலாம். செய்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வரலாம். கடன்சுமை படிப்ப டியாகக் குறையும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த புது முயற்சி வெற்றிதரும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்காலம் இனிமையாக அமைய எடுத்த முயற்சி வெற்றி தரும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு புதிய துறைகளைத் தேர்ந்தெடுத்து அதில் முதலீடு செய்ய முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு முன்னேற்றம் காண்பர். கலைஞர்களுக்கு சக கலைஞர்களின் மூலம் நன்மை வந்துசேரும். மாணவ- மாணவிகளுக்கு ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்படி படிப்பு சிறப்பாக அமையும். பெண் களுக்கு குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். தங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. பணி புரியும் பெண்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

### மகரம்

**நண்பர்களால் நல்வாழ்வு அமையும் என்று சொல்லும் மகர இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரைச் சனியில் கும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. முதல் சுற்றா? இரண்டாவது சுற்றா? மூன்றாவது சுற்றா? என்பதை பொறுத்துப் பலன்கள் நடைபெறும். மேலும் ஆனி 12ஆம் திகதி சனி வக்கிரம் பெறுவதால், அதன் பிறகு நற்பலன்கள் படிப்படியாக வந்துசேரும். மாதத்தின் பிற்பகுதியில் எதிர்பாராத முன்னேற்றங்கள் கிடைக்கும். எடுத்த காரியத்தில் இருந்த தடைகள் அகலும். தேவைக்கேற்ற பணம் தேடி வரும்.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 6 இல் சஞ்சரிக்கும் பொழுது, ரோக ஸ்தானம் பலப்படுகின்றது. எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். கடன்சுமை ஏற்படும். எதையும் திட்ட மிட்டு செய்ய இயலாது. தன்னம்பிக்கை குறையும். தடைகளைத் தாண்டி முன்னேற வழிபாடுகள் உங்களுக்கு க்கைகொடுக்கும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அவர் உங்கள் இராசிக்கு 4, 11 இற்கு அதிபதியானவர். அவர் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். பூர்வீகச் சொத்துகளில் பிரச்சினைகள் ஏற்படும். எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் குறுக்கீடுகள் ஏற்படும். உயர் அதிகாரிகளின் இணக்கம் குறையும். முன்னேற்றப் பாதையில் சறுக்கல் ஏற்படாமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்குள்ள செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கல யோக"த்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். இடம், பூமி வாங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு விருப்பப்பட்ட இடத்திற்கு மாறுதல் அடைவர். கடன் பிரச்சினைகள் படிப்படியாக தீரும். குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது பதிவதால் உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். உத்தியோகத்தில் சம்பள உயர்வுடன் கூடிய வாய்ப்புகள் வரலாம். திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாங்கிய சொத்துக்களால் இலாபம் உண்டு.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் புதனால் கல்வி சம்பந்தமாக எடுக்கும் முயற்சி கைகூடும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். செய்தொழிலில் புதிய பணியாளர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். தேசப்பற்று மிக்கவர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில் வெற்றி நடைபோடும். வாசல் தேடி வரன்கள் வந்துசேரும். வெளிநாட்டில் இருந்து உத்தியோகம் சம்பந்தமாக அழைப்புகள் வரலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு பணியாளர்களால் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் தாமதமாகக் கிடைக்கும். கலைஞர்கள் பொறுமையோடு செயற்பட வேண்டிய நேரம். மாணவ-மாணவிகள் மிகுந்த கவனத்தோடு படித்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். பிறருக்கு பணப்பொறுப்பு சொல்வதை பெண்கள் தவிர்ப்பது நல்லது. மாதத்தின் பிற்பகுதியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 209





வீட்டுப் பகுதிகளின் வழியாகச் சென்றபோது ஸ்திரீகள் அங்கங்கே வீட்டு ஒரங்களில் கூடி நின்று கோபமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்டு போனான். அந்த ஸ்திரீகள் அனைவரும் தத்தம் கணவர்கள் அல்லது புதல்வர்களின் கழுத்தில் வஞ்சிப் பூமாலை அணிவித்து உற்சாகமாக ஈழத்துப் போர் முனைக்கு அனுப்பியவர்கள். நாலு திசைகளிலும் சோழ சைன்யங்கள் நடத்திய வீரப் போர்களில் யாராவது ஒரு வீரன் அந்த ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சென்று வீர சொர்க்கம் அடையாமலிருந்தது கிடையாது. அப்படிப்பட்ட பெண்கள் இப்போது அதிருப்தியுடன் முணுமுணுத்துப் பேசிக் கொண்டிருந்ததைத் திருமலையப்பன் பார்த்தான். இதெல்லாம் என்ன விபரீதத்தில் போய் முடிகிறதோ என்று கவலைப்பட்டுக் கொண்டே சென்றான்.

வடமேற்றளி கோயிலை அவன் அடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. அப்பர் பெருமானால் பாடப்பெற்ற கோயில் இதுதான். அந்த மகானுடைய காலத்தில் இக்கோயிலைச் சுற்றிச் சமணர்கள் செயற்கைக் குன்றுகளை எடுத்து, அந்தக் குன்றுகளில் முழைகளை அமைத்திருந்தார்கள். அப்படி ஏற்பட்ட செயற்கை மலைக் குகைகளில் திகம்பர சமணர்கள் உட்கார்ந்து தவம் செய்து கொண்டிருந்தார்கள். இதை நமக்கு ஞாபகப்படுத்துவதற்காக இன்றைக்கும் பழையாறைக்கு அருகில் முழையூர் என்று ஓர் ஊர் இருக்கிறது.

அப்பர் பெருமான் பழையாறை ஸ்தல மகிமையைப் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு வந்து சேர்ந்தபோது சமணர்களின் முழைகள் சிவன் கோயிலை அடியோடு மறைத்திருந்தன. இதை ஆத்ம ஞானத்தினால் அறிந்த அப்பர் மனம் வருந்தினார். பல்லவர்களின் பிரதிநிதியாக அச்சமயம் சோழ நாட்டைப் பரிபாலித்து வந்த சிற்றரசனிடம் முறையிட்டார். அரசன் அந்தச் செயற்கை முழைகளில் ஒரு பகுதியை இடித்து அப்புறப்படுத்தினான். உள்ளே சிறிய சிவன் கோயில் இருப்பது தெரிந்தது. அப்பர் பரவசமடைந்து பாடினார்.

அந்தக் கோயில் பிற்பாடு சோழ மன்னர்களால் சிறப்படைந்து கற்றளியாகக் கட்டப்பட்டது. ஆனால் இன்னமும் கோயிலைச் சுற்றிலும் முழைகள் சூழ்ந்து பிராகாரச் சுவர் போல் அமைந்திருந்தன. கோயிலுக்குள் பிரவேசிப்பதற்கு கோபுர வாசல் ஒன்றுதான் இருந்தது வேறு வாசலே கிடையாது. கோபுர வாசல் வழியாகக் கோயில் பிராகாரத்துக்குள் சென்று, ஈசான சிவபட்டரின் வீட்டைச் சுலபமாக அடையலாம். இல்லாவிட்டால் சுற்றி வளைத்துக் கொண்டு போக வேண்டும்.


இப்படித் தன் தமையனாரின் வீட்டைக் குறுக்கு வழியில் அடைவதற்காகத் திருமலை கோபுர வாசலுக்குள் நுழைந்தான். உள்ளே சுவாமி சந்நிதியில் சில அடியார்கள் நிற்பது தெரிந்தது. அவர்கள் கிருஷ்ணனைப் போலவும் பலராமரைப் போலவும் வேஷந்தரித்து வந்த கோஷ்டியார் என்று தோன்றியது. "ஆகா! இவர்கள் எங்கே இங்கு வந்து சேர்ந்தார்கள்!" என்று அவன் எண்ணமிடுவதற்குள், ஈசான சிவபட்டர் கோயிலுக்குள்ளேயிருந்து அவசரமாக வெளியேறி வந்தார். அப்போது தான் கோபுர வாசலுக்குள் நுழைந்திருந்த திருமலையின் கையைப் பிடித்துப் பரபரவென்று வெளியில் இழுத்துச் சென்றார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கலியுக கர்ணன்



மாணிக்கம், கேசவன் இருவரும் அடுத்தடுத்த வீட்டுக்காரர்கள். நல்ல வசதி படைத்தவர்கள். இருவரும் நண்பர்கள். ஆனால், குணத்தில் இருவரும் நேர்மாறானவர்கள்.

கேசவன் யாருக்காவது ஒரு சிறு கஷ்டம் என்றாலும் உதவி செய்வதற்கு முன்னால் நிற்பான். ஊரில் அவனை அனைவரும், "கலியுக கர்ணன்" என்று புகழ்வர்.

மாணிக்கம் அவனுக்கு நேர் எதிராக இருந்தான். அவனை அனைவரும், "சுயநலக்காரன்" என்று ஏசினர்.

மாணிக்கம், கேசவன் அடுத்தடுத்தி காட்டை விலைக்கு வாங்கினர். கேசவன் தன் காட்டை அழித்து கனி மரங்களை உருவாக்கினான். கிணறு வெட்டி அவற்றிற்கு நீர் பாய்ச்சினான். சில ஆண்டுகளுக்குப் பின் அந்த மரங்கள் கனிகளை வாரி வழங்கின.

மாணிக்கம் தன் நண்பனைப் போல் காட்டை அழிக்காமல், மரங்களை நடாமல், அப்படியே விட்டு விட்டான். அதனால், அவனுடைய காட்டில் முற்புதர்கள் சேர்ந்து விட்டன.

கேசவன் தன்னுடைய பழத் தோட்டத்திற்கு போக வேண்டுமென்றால் மாணிக்கத்தின் காட்டு வழியாகத் தான் போக வேண்டும்.

ஒரு நாள், கேசவன் மாணிக்கத்தின் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்த போது, அவன் காலில் நாலைந்து முட்கள், "நறுக் நறுக்" என்று குத்தி ரத்தம் கொட்டியது.

அதன் காரணமாக கோபம் கொண்ட கேசவன் மாணிக்கத்தைப் பார்த்து திட்டினான்.

அதனால், இருவருக்கும் சண்டை உண்டாகி நட்பு முறிந்தது. அதனால் அவர்கள் அன்று முதல் பேசிக் கொள்வதேயில்லை.

நாட்கள் சென்றன. ஒரு நாள் கேசவன் தன் தோட்டத்தில் விளைந்த பழங்களை எல்லாம் பறித்து ஊரிலுள்ள அனைவருக்கும் இலவசமாக வழங்கினான். மகிழ்ச்சி கொண்ட ஊர் மக்கள் அனைவரும் அவனை வாழ்த்தினர்.

இப்படியே ஊரிலுள்ளவர்கள் வாழ்த்த வாழ்த்த கேசவனுக்கு புகழ் வெறி பிடிக்கத் தொடங்கியது. கேசவன் ஊரையே அழைத்து ஆயிரக் கணக்கில் செலவு செய்தான்.

மக்களுக்கு தேவையானதை வாரி, வாரி இறைத்தான். மக்களும் அவன் வீட்டு வாசலில் குவிந்தனர். கேசவனும் புகழ் வெறியில், மக்களுக்கு தேவையானதை பூர்த்தி செய்து வந்தான். அந்தச் சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம் கூட்டத்தினரை நோக்கி, "ஊர் மக்களே! நீங்கள் யாருடைய பணத்தில் ஆட்டம் போடுகிறீர்கள் தெரியுமா ?" என்று கேட்டான்.

எல்லோரும் விழித்தனர். "இது என்னுடைய பணம்". கேசவன் தந்தை தன்னுடைய நிலங்களை எல்லாம், என் தந்தையிடம் விற்று பணம் வாங்கியிருந்தார். ஆனால், நட்புக் காரணத்தால், கேசவன் தந்தையின் நிலத்தை சொந்த மாக்கிக் கொள்ளாமல் விட்டு விட்டார்.

என் தந்தை இறந்து போன பிறகு இந்த விஷயம் இதுவரை எனக்கு தெரியவில்லை. இன்று நான் என் தந்தையின் பழைய பெட்டியை குடைந்த போது அதில் கேசவன் தந்தை என் தந்தைக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தைக் கண்டு எடுத்தேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டம் வரும் போது கண்ணை மூடாதே அது உன்னை கொன்றுவிடும். கண்ணைத் திறந்து பார் அதை நீ வென்று விடலாம். – *அப்துல் கலாம்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தற்கொலைகளின் அதிகரிப்பு எதனை உணர்த்தி நிற்கிறது

பொறியியல் பீடத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் மாணவர்கள் ஒரே நாளில் தற்கொலை செய்து கொண்டனர் என்ற செய்தி மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகுவதென்பதற்குப் பின்னால் இருக்கக்கூடிய முயற்சிகள், தியாகங்கள், அர்ப்பணிப்புகள் என்பன சாதாரணமானவை அல்ல.

மாணவர்களின் கடுமையான படிப்பு, அதற்காக அல்லும் பகலும் பாடுபட்ட பெற்றோர்கள், கல்விச் சமூகம் என ஒரு பெரும் பாடுகளின் விலையாக விதைக்கப்பட்டது தான் பொறியியல் துறைக்கான தெரிவு.

இவ்வாறு தமது பிள்ளை பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகியபோது, அந்தப் பிள்ளையின் பெற்றோர் அடைந்த ஆனந்தம். அவர்களிடம் இருக்கக்கூடிய கற்பனைகள், என் பிள்ளையை பொறியியலாளராக ஆக்கிவிட்டேன் என்ற மனநிறைவு அதற்குள் இருக்கக்கூடிய பெருமை என ஏகப்பட்ட சமூகம் சார் விடயங்கள் உள்ளன.

இந்த விடயங்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட பிள்ளைகள் நிச்சயம் அறிந்திருப்பர்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஒரு கணப்பொழுதில் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்கள் இருவர் தமது உயிரை மாய்த்துக் கொள்கின்றனர் எனும்போது, எங்கோ சிக்கலும் பிரச்சினையும் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

ஆம், மாணவர்களுக்கு கல்வியைக் கொடுத்த எங்கள் சமூகம் அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கவில்லையா? அல்லது பிரச்சினையை எதிர்கொள்கின்ற திறனை வளர்த்துவிடவில்லையா? அல்லது பிரச்சினைகள் ஏற்படும்போது அவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நட்பும் கிடைக்கவில்லையா?

அல்லது தற்கொலை எந்தவகையிலும் தீர்வல்ல என்ற உண்மை உணர்த்தப்படவில்லையா என்ற கோணங்களில் நாம் சிந்தித்தாக வேண்டும்.

ஆம், இன்றைய சமகால தளத்தில் தற்கொலைகள் அதிலும் குறிப்பாக இளவயதினரின் தற்கொலைகள் நம் தமிழ்ச் சமூகத்தில் அதிகரித்து வருகின்றன.

இந்தநிலைமை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

இல்லையேல் தற்கொலை செய்து கொள்பவர்கள் தம்மை அழித்து, தமது பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் மக்கள் சமூகத்துக்கும் கடும் தண்டனை கொடுத்து விடுவர்.

ஆகையால் அன்புக்குரியவர்களே! எங்கள் பிள்ளைகளுக்கு படிப்பு என்பதை மட்டும் திணிக்காமல், அவர்கள் வாழ்வதற்கும் படிப்பித்து விடுங்கள். இது நம் மன்றாட்டமான கோரிக்கை.

*(குறிப்பு:- பொறியியல் பீட மாணவர்கள் இருவரின் மரணமும் தற்கொலை என்ற அறிக்கையின் அடிப்படையிலேயே இக்கருத்து முன்வைக்கப்படுகிறது.*

*மரணத்துக்கான காரணங்கள் வேறாக இருப்பின் அதற்கு இக்கருத்து பொருந்தாது என்பதைக் கவனத்தில் கொள்க.)*

# உக்ரைன் மக்களின் வலிகளை தமிழினத்தால் உணர முடிகின்றது

## சபையில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு).

இலங்கையில் 30 ஆண்டுகளாக நிகழ்ந்த உள்நாட்டு யுத்தத்தில் பாரிய அவலங்களை எதிர்கொண்ட தமிழினம் அதன் வலிகளை சுமந்து வடுக்கள் நிரம்பிய அனுபவங்களை கொண்டுள்ளதன் அடிப்படையில் உக்ரைன் நாட்டு மக்களின் வலிகளையும் உணரக்கூடியதாக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது உக்ரைன் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவலநிலைகள் தொடர்பாக குறிப்பிடும் போது இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

உலக சமாதானத்துக்காக உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புப் போரை ரஷ்ய அரசாங்கம் நிறுத்த வேண்டும். இழப்பின் வலிசுமந்து நிற்கும் உக்ரைன் மக்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம். சொந்த நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்தாலும் நாடற்ற மனிதர்களாக ஏதிலிகளாக்கப்படுவதும் எத்தனை கொடியது என்பதை ஈழத் தமிழினம் நன்கு அறியும்.

தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதப் பேரவலமொன்றின் விளிம்பு நிலையில் நின்று ஏதிலிகளாக அந்தரிக்கும் உக்ரைன் மக்களுக்கும் இதே நிலை தொடரக் கூடாது என்பதை உணரத்தலைப்பட்டிருக்கிறோம். இதுவரை 6.5 இலட்சம் உக்ரைன் மக்கள் நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். 55 இலட்சம் உக்ரைனியக் குழந்தைகளின் கல்வி அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. உக்ரைனிலுள்ள பாடசாலைகளில் ஒருநாளைக்கு சராசரியாக 22 பாடசாலைகள் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. ஒரு கொடிய யுத்தத்திற்குள் நின்று அந்த யுத்தக் கொடுமைகளின் அத்தனை பக்கங்களையும் அணுவணுவாக அனுபவித்தவன் என்கின்ற வகையில் என்னால் இந்தப் போரையும் அதன் விளைவுகளையும் இலகுவானதாகக் கருத முடியவில்லை. ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் போரின் போது உக்ரைன் இலங்கை அரசுக்கு தனது பரிபூரண ஆதரவை வழங்கியிருந்தது.

குறிப்பாக 61 மாணவிகளின் உயிரைக் குடித்த செஞ்சோலைப் படுகொலை உள்ளிட்ட பல விமானத் தாக்குதல்களின் போது அத்தகைய குண்டுவீசும் விமானங்களை உக்ரைனியர்களே செலுத்தியிருந்தனர். இறுதிப்போரின் இறுதி நாட்களில் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களை நோக்கி தமது உயிரைக் காக்கும் ஒரே எண்ணத்தோடு எமது மக்கள் திரண்டிருந்தபோது அவ்விடங்களில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களிலும் உக்ரைனியர்களின் நேரடிப் பங்கிருந்தது. நாங்கள் ஒரே நாடாக ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று இந்த உயர்ந்த சபையில் அடிக்கடி கூறிவருகின்ற சகோதர இன நண்பர்கள் ஒரு யுத்தத்தின் கொடுமை எப்படி இருக்கும் என்ற .எனது உணர்வை ஒரு தமிழனின் உணர்வாக மாத்திரம் பார்க்காமல் ஒரு சக மனிதனின் உணர்வாகப் பார்க்கவேண்டும் என்று த்யவாக்க் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ம-7)

## பெண்ணின் வயிற்றிலிருந்து 10 கிலோ கட்டி அகற்றல்

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் பெண்ணொருவரின் வயிற்றில் இருந்து சுமார் பத்து கிலோ எடையுள்ள கட்டி அகற்றப்பட்டுள்ளதாக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சுரங்க உபேசேகர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் மகப்பேறு வைத்திய நிபுணர் வைத்தியர் சமந்த சமரவிக்ரம தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சத்திரசிகிச்சையில் கருப்பை வாயில் இருந்து இந்தக் கட்டியை அகற்றியுள்ளனர்.

சுவாச பிரச்சினை காரணமாக கடந்த வியாழக்கிழமை சிகிச்சைக்காக வருகை தந்த 49 வயதுடைய பெண் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட ஸ்கேன் பரிசோதனையில் கட்டி கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து குறித்த பெண் உடனடியாக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்த சத்திரசிகிச்சையினை தொடர்ந்து நோயாளி நலமுடன் இருப்பதாக விசேட வைத்தியர் சமந்த சமரவிக்ரம தெரிவித்துள்ளார். (ம-7)

## அநுராதபுரம் வைத்தியசாலையில் வைத்தியர்கள் மோதல்

### ஒருவர் படுகாயம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் இரு வைத்தியர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடமையின் போது குறித்த இரு வைத்தியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கமே இம்மோதல் உருவாவதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-7)

# நாட்டில் எச்.ஐ.வி தொற்று 13 சதவீதத்தால் அதிகரிப்பு

## வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இலங்கையில் எச்.ஐ.வி தொற்று 13 வீதத்தால் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இந்நிலைமை நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதால் இது தொடர்பில் அவ்தானம் செலுத்த வேண்டும் என அவர் பாராளுமன்றில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலக சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வரவு செலவு பற்றி பேசிக் கொண்டிருக்கும் அதே சந்தர்ப்பத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரித்துள்ளது என்றும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டினார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு [illegible] 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கலியமடம் ஸ்ரீ நரசிங்க ஞான வைரவர் ஆலய பொதுக்கூட்டமானது எதிர்வரும் (30) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தரது பங்கு பற்றலுடன் இடம்பெறும் இக்கூட்டத்தில் ஆலய வளர்ச்சியில் ஆர்வமுடைய சகலரையும் கலந்து சிறப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக தனி ஒருவர் போராட்டம்




(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடம் மாற்ற கோரி யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு முன்னால் பெண் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

நேற்று குறித்த போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து குறித்த பெண் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (4)

## பெண் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்த புதிய செயற்றிட்டம்

(கண்டாவளை)
ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் பிரிவின் முக்கிய கலந்துரையாடல் நேற்று முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு.க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா பிரதேச செயலகத்திற்குட்பட்ட 120 பெண் தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கி பெண்களை பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரத்தன்மையில் வைத்திருக்கும் நோக்கில் செயற்றிட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பெருளாதார அபிவிருத்தியில் பெண்களை வலுவான நிலையில் வைத்திருக்கும் நோக்குடன் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வாழ்வாதார உதவி மற்றும் சுகாதார உதவி, திறன் விருத்தி, வியாபார நுட்பங்களை கற்றுக் கொடுத்தல், இணைய வழி வியாபார நடைமுறை நுட்பம் முதலான விடயங்களை பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-315)

## கஞ்சாவுடன் இருவர் கிளிநொச்சியில் கைது

(கிளிநொச்சி)
கிளிநொச்சி - பளை பகுதியில் சுற்றுக் காவலில் ஈடுபட்ட பொலிஸாரினால் 2.160 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பட்டாரக வாகனம் ஒன்றில் கஞ்சாப் பொதியினை மறைத்து வைத்திருந்த நிலையில் பொலிஸார் வாகனத்தினை சோதனையிட்டபோது கஞ்சாப் பொதிகைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் கடந்த வருட இறுதிப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மீண்டும் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (4)

## யானை தாக்கி இளைஞர் மரணம்

(கொழும்பு)
காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டம் தமன்கடுவை பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தமன்கடுவையைச் சேர்ந்த 21 வயதுடைய நபரே இதன் போது உயிரிழந்துள்ளார். அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று விசாரணைகளை நடத்தி வரும் தமன்கடுவைப் பொலிஸார் தெரிவித்தனர். (4)

## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நாளை மறுதினம் 23 ஆம் திகதி பகிரங்க மணல் ஏல விற்பனை நடைபெறவுள்ளது. ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன் பதிவாளரின் அனுமதியுடன் மணலை பார்வையிடலாம் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கான கைவிரல் அடையாளப் பதிவு

### பரு.பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைப்பு



(யாழ்ப்பாணம்)
கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கான கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளையில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறிலாலால் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு இணையத் தளமூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பின்னர் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களது தொலைபேசிக்கு அனுப்பப்படும் குறுந்தகவலுக்கு அமைய அவர்கள் பிரதேச செயலக ஆட்பதிவுக் கிளைக்குச் சென்று தமது கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் இந்த நடவடிக்கைக்காகப் பருத்தித்துறை பிரதேச செயலகமும் சாவகச்சேரி பிரதேச செயலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் 33 ஆவது குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளின் 33 ஆவது குருபூசை தினம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரம பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஆச்சிரம நிர்வாகம் அறிவித்துள்ளது. (4)

## அரியாலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 22 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் இவ் மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4)

## நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கிடையிலான பிணக்குகள் தொடர்பில் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு நன்னீர் மீன்பிடி சங்கங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



குறித்த கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

கரைச்சி கிராமிய மீனவர் அமைப்பு மற்றும் இரணைமடுக்குள கிராமிய நன்னீர் மீனவர் அமைப்பு ஆகிய நன்னீர் மீன்பிடி அமைப்புக்களுக்கிடையிலான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலாகவே அமைந்திருந்தது.

மேலும் குறித்த பிரதேச மக்களும் இரணைமடு நன்னீர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் குறித்த குளத்தில் விடப்படுகின்ற மீன் குஞ்சுகளின் தொகையினை அதிகரிப்பது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இரு நன்னீர் மீனவர் அமைப்புக்களுக்கிடையிலான பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பில் இரு தரப்பினருக்கும் பொதுவான அறிக்கையினை தயாரித்து உடனடியாக தமக்கு சமர்ப்பித்து, அதனை நடைமுறைப்படுத்துமாறு துறை சார்ந்த அதிகாரிகளுக்கு கடற்றொழில் அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கினார். (4-316)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாணின் விலை...

நள்ளிரவு முதல் பாணின் விலை 10 ரூபாயால் குறைக்கப்படுகின்றதுடன் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையில் எந்தவித மாற்றமுமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் பிற மாவட்டங்களை விட எமது மாவட்டத்தில் ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்கள் விலை குறைவாகவே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோதுமைமா உட்பட்ட மூலப்பொருட்களின் விலைகள் மாற்றமடையும் போது பணிஸ் வகைகளின் விலைகள் குறைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பாராளுமன்ற...

நிதிக்கான குழு, பாராளுமன்ற பாதீட்டு அலுவலகத்தை நிறுவுவதற்கான யோசனைக்கு திருத்தத்துடன் ஒப்புதல் அளித்திருந்த இந்த சட்ட அமுலாக்கம், காலதாமதமாகிவிட்டதாகவும் இது அலுவலக பகுப்பாய்வு செயல்பாட்டில் மிகவும் தேவையான சுதந்திரத்தை புகுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்களுடைய சொந்தக் கட்சியின் பொருளாதார அறிக்கைகளை சுதந்திரமான பகுப்பாய்விற்காக பாதீட்டு அலுவலகத்திற்கு அனுப்புவதற்கான ஒரு புதிய விதியை இந்த சட்டம் கொண்டுள்ளது.

அத்துடன் முன்மொழியப்பட்ட யோசனைகளை பகுப்பாய்வு செய்ய பாராளுமன்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சுயாதீனமான நிறுவனமாகவும் பாராளுமன்ற பாதீட்டு அலுவலகம் செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## உள்நாட்டுக்...

சாங்கம் உறுதியளித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு என்பது குறைப்பு மட்டும் அல்ல என்றும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு என்பதில் கடன் நிறுத்தம் அல்லது வட்டியைக் குறைப்பது ஆகியவையும் அடங்கும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ளபடி உள்நாட்டுக் கடனை மறுசீரமைத்தால் நாடு பிற்காலத்தில் பாரிய பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## தமிழ் மக்களின்...

அவர்கள் அழைத்தது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் அகதிகள் பேரவை தமிழ் அகதிகளிற்கு தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குதல், கல்வி தொடர்பான உதவிகளை வழங்குதல், அகதிகள் தொடர்பான பரப்புரைகளை முன்னெடுத்தல் போன்ற முக்கியமான சேவைகளை அகதிகளிற்கு வழங்கி வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்துடன் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 14 வருடங்களாகின்ற போதிலும் அதற்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களின் தனிநாட்டிற்கான போராட்டத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது இவர்கள் முள்ளிவாய்க்காலில் சிக்கவைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களில் பலர் இன்னமும் இலங்கை அரசாங்கத்திலும் இராணுவத்திலும் உயர்பதவிகளில் நீடிக்கின்றனர், எனவும் குறிப்பிட்டுள்ள அவர் அவுஸ்திரேலிய கிறீன்ஸ் கட்சியினர் இலங்கையில் தமிழர்களிற்கு எதிராக தொடரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை கண்டிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களிற்கு சுயநிர்ணய உரிமைக்குள்ள உரிமை பாதுகாப்பு மற்றும் சமாதானத்திற்கு எங்கள் கட்சி ஆதரவளிக்கின்றது எனவும் குறிப்பிட்டுள்ள அவர், அவுஸ்திரேலியாவில் உள்ள ஈழம் தமிழ் அகதிகள் தொடர்பான தீர்மானங்கள் முடிவுகள் குறித்த தகவல்களை பெறுவதில் கடும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் தமிழ் அகதிகளின் அடைக்கல கோரிக்கைகளே அதிகளவு நிராகரிக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ள அவர் எங்கள் நாட்டில் உள்ள தமிழர்கள் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் வாழ்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பலாலி...

முகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக 168 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சிறிய பயணிகள் முனையத்தில் நிலவும் இடப்பற்றாக்குறையால் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதே இதன் நோக்கம் என துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## பல்கலைக்கழக...

ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 8 மாதங்களில் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் 06 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் நான்கு மாணவர்கள் பொறியியல் பீடத்தை சேர்ந்தவர்கள்.

மேலும் நான்கு மாணவர்கள் தற்கொலைக்கு முயன்றுள்ளனர். சமூக தொடர்பு இல்லாததே இதற்குக் காரணம் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான பல்கலைக்கழக மாணவர்களின் சகிப்புத்தன்மை குறைந்துள்ளது.

பள்ளிப் பருவத்திலிருந்தே குழந்தைகளின் திறன்களை கண்டறிந்து, தகுந்த மனநிலையுடன் பாடத்திட்டம் மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு அவர்களை வழிநடத்த அனுமதிக்கவும், விளையாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்கும்போது முடிந்தவரை சமாளிப்பதற்கான தன்மையை வளர்க்கவும் பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுவதாக நிபுணர்கள் கூறியுள்ளனர்.

பொதுவாக அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றார்கள் என்றும், பரீட்சை குறித்த பயம் ஏற்கெனவே உருவாகியுள்ளதென்றும், குழந்தைகளின் மன சுதந்திரத்தில் சிறுவயதிலிருந்தே பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தடையின்றி...

அதனை நிவர்த்திக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் நிதி அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சி உறுப்பினர் சந்திம வீரக்கொடி எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சந்திம வீரக்கொடி குறிப்பிடுகையில்,

அரசாங்கத்தினால் மூத்த பிரஜைகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவு கடந்த மூன்று மாதங்களாக வழங்கப்படவில்லை.

அதேவேளை, வலது குறைந்தவர்களுக்காக வழங்கப்படும் கொடுப்பனவும் இவ்வாறு வழங்கப்படுவதில்லை அது தொடர்பில் நிதியமைச்சு உடனடி கவனத்தை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஜனனம் 30 - 09 - 1985



மறைவு 25 - 05 - 2023

கடந்த 25.05.2023 அன்று இறைவனடி சேர்ந்த எமது மகன்

அமரர்

**வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.06.2023 அன்று காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 24.06.2023 (சனிக்கிழமை) காலை 7.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், மதிய போசன நிகழ்வும் அன்று **முற்பகல் 11.00 மணியளவில் பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள இராசமணி மண்டபத்தில்** நடைபெறும்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில். (16032)

இங்ஙனம்
குடும்பத்தினர்

---

## மேட்டுக்காணி விற்பனைக்குண்டு

கிளாலிச் சந்தியிலிருந்து புலோப்பளைப் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஆறு ஏக்கர் தென்னம் பிள்ளை வைப்பதற்கு சாதகமான மேட்டுக்காணி நான்கு பக்கமும் தூண்கள் போடப்பட்டு ஏழு வரி முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு கேற்றும் போடப்பட்டுள்ளது.இக்காணி விற்பனைக்குண்டு.

(16015) **077 649 1027**

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்
### 24/06/2023

**Certificate Course in English**
20 Batches have Successfully Completed the course (4 Months)

**Further Details:** Jaffna College
Undergraduate dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
077 440 5917
(C-6782)

---

## TECHNO WORLD
### தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

A/L தொழில்நுட்ப பிரிவு

## இறுதிச் சந்தர்ப்பம்

செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்
- உயிர்முறைமை தொழில்நுட்பம்
- பொறியியல் தொழில்நுட்பம்

மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு (C-6783)

ஆரம்பம் : 24.06.2023 (சனிக்கிழமை) காலை 9.30

தொடர்புகளுக்கு : **077 017 5346**

---

## 1,227 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது

(கொழும்பு)

எம்பிலிபிட்டியவில் 1.227 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட சட்டத்தரணி பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட பாரியளவான கஞ்சா தொகையாக இது கருதப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

---

# INFORMATION TECHNOLOGY PARK
*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Investment Promotion*

MPCS Building,
127,K.K.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**O/L** பரீட்சை எய்திய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

2023 JUNE BATCH
- *Dip.in Microsoft Office*
- *Dip.in Desktop publishing*
- *Dip.in Information Technology*
- *Dip.in Computer Programming*
- *Dip.in Wep Page Designing*

06 Month Online Course
- *Dip.in PC Application & Office Management*

06 Month Languages
- *VB.net*
- *PHP*
- *C/C++*
- *C#*
- *Java*
- *AutoCAD*

20 hours Workshops
- *Internet & e-mail*
- *Hardware*

(C-6784)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

| | |
|---|---|
| வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | :-30.06.2023 |
| வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | :-01.07.2023 |

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16027)

**076 825 7716** (ஆகாஸ்)

---

## மாலை நேர மீட்டல் வகுப்புக்கள்
### A/L 2023 & 2024

**வர்த்தகப் பிரிவு**

| | |
|---|---|
| கணக்கீடு | : D.Sam |
| பொருளியல் | : K.R.உதயன் |
| வணிகக்கல்வி | : T.s.ரிஷி & பசில் ஜெஷோன் |

நாளை மாலை 3 மணி

**DMI JAFFNA** (16029)

---

## DMI இல்
## பொருளியல்
## K.R.உதயன்
## உம்

(16029)

---

## மணமகள் தேவை

05.03.1984, 9.33 ல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. சந்திரன் லக்கினம் ராகு 3,4,5,6,7 செவ்வாய், சனி 8, கேது 9 குரு, வெள்ளி, சூரியன், புதன். (16031)

**077 247 3457** (இரவில் மட்டும்)
**076 204 4896**

---

## யாழ் நகரில்
## வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள்

**புதிய பிரிவு ஆரம்பம் : 24.06.2023**

பிரிவு I – வாரநாட்கள்(பி.ப)
பிரிவு II – சனி, ஞாயிறு
**இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு**
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

## G.C.E A/L 2024, 2025

- வணிகக்கல்வி
- கணக்கீடு
- பொருளியல்
- தொடர்பாடல் தொழில்நுட்பம்

T.P: 021 222 3382, 077 440 5917

(மாணவர்கள் குழுக்களாகவும் கற்கலாம்.)

மதிப்பீட்டு பணியில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். (C-6781)

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6788)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

---

## உடனடி வேலை வாய்ப்பு
### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6788)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.